# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE

## NAGAPATTINAM.

**C.C.01/2018** P.W.10

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. திருமாறன் | Father's Name. | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling : | |
| Religion | : | Age : | |
| Date | : 02.12.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 02.12.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் வேளாங்கண்ணியில் வசித்துவருகிறேன். கேம் சென்டர்வைத்து தொழில் செய்துவருகிறேன். 2015 ம் வருடம் என்னுடைய பேன்ஸ்டோரில் என் மனைவி சுகன்யா என்பவரை வேலைக்கு சேர்த்திருந்தார். ஒரு நான்கு ஐந்து நாள் வேலைப்பார்த்தார் அதன்பிறகு போய்விட்டார். தேதி மாதம் ஞாபகம் இல்லை 2015 ம் வருடம். ஒருநாள் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். சுகன்யாவின் குழந்தை காணாமல்போய்விட்டதாக சொன்னார்கள். எப்படி காணாமல்போனது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னேன். போலிசார் விசாரித்தபோது சுகன்யா குழந்தை எதையும் கொண்டுவரவில்லை என்றும் குழந்தை இருந்தால் வேலை கொடுப்பதில்லை என்றும் சொன்னேன். மற்றபடி குழந்தை எப்படி காணாமல் போனது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்ரகள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை**.

# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE

## NAGAPATTINAM.

**C.C.01/2018** P.W. 11

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி. அல்போன்சாராணி | Father's Name . | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 02.12.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் வேளாங்கண்ணியில் வசித்துவருகிறேன். எம்.டி.எம். பேன்ஸ்டோரில் வேளாங்கண்ணியில் வேலைப்பார்த்தேன். கிருஸ்மஸ் லீவுக்காக 2015 ம் வருடம் சொந்த ஊருக்கு போய்விட்டேன். லீவு முடிந்து நான் வந்த போது வேலை ஆள் இல்லை என்பதால் என் முதலாளி வேலை ஆள் சேர்திருப்பதாக சொன்னார்கள். அந்த பெண் பெயர் சுகன்யா. நான் வந்த பிறகும் அவர் எங்கள் கடையில் வேலைப்பார்த்தார். ஒரு மூன்று மாதம் கழித்து அவர் வேலைப்பார்க்கவில்லை போய்விட்டார். கொஞ்சம் நாள் கழித்து போலிசில் இருந்து போன் வந்தது. சுகன்யாவின் குழந்தையை கடத்திவிட்டதாகவும் விசாரிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அப்போது குழந்தை எல்லாம் கடைக்கு கொண்டுவரவில்லை கஷ்டத்தில் தனியாக இருப்பதாக சொன்னதால்தான் என் முதலாளி வேலைக்கு சுகன்யாவை சேர்த்ததாக சொன்னார். அந்த குழந்தையை நாங்கள் யாரும் பார்த்ததே இல்லை. குழந்தையை யார் கடத்தினார்கள் என்ற விபரம் எல்லாம் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை**.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**C.C.01/2018** P.W. 12

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. ராஜா | Father's Name . | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling : | |
| Religion | : | Age : | |
| Date | : 02.12.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 02.12.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

வேளாங்கண்ணியில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ டிரைவராக வேலைப்பார்த்துவருகிறேன். 3.8.2016 ம் தேதி காலை 10 to 10.30 மணியிருக்கும் மாதா குளம் அருகில் கூட்டமாக இருந்தது. நான் போய் பார்த்தேன் அப்போது ஆய்வாளர் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார். குழந்தையை யாரோ தூக்கி கொண்டுபோன வழக்கு சம்மந்தமாக விசாரிப்பதாக சொன்னார்கள். என்னுடன் தேவேந்திரன் என்பவரும் இருந்தார். போலிசார் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சியாக நான் கையெழுத்துப்போட்டேன். என்னுடன் தேவேந்திரனும் கையெழுத்துப்போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அதசாஆ.6 ஆகும். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை**.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**C.C.01/2018** P.W. 13

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. தேவேந்திரன் | Father's Name . | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.2021 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 02.12.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் கருவேலங்கடையில் குடியிருந்துவருகிறேன். ஊர்காவல் படையில் வேலை செய்துவருகிறேன். 3.8.2016 ம் தேதி காலை 10.30 மணிக்கு பழைய மாதாகோவில் பக்கத்தில் ஆய்வாளர் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்துகொண்டிருந்தார். குழந்தை காணாமல்போன கேசுக்காக விசாரிப்பதாக சொன்னார்கள். அதில் நானும் ராஜாவும் சாட்சிகளாக இருந்து கையெழுத்து செய்தோம். பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை**.